வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் தட்டுப்பாடு

தமிழகத்தில் 15 சதவீதம் உணவகங்கள் மூடல்

கள்ளச்சந்தையில் சிலிண்டர் ரூ.6 ஆயிரத்துக்கு விற்பனை

■ சென்னை

வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் தட்டுப்பாட்டால், தமிழகத்தில் 15 சதவீதம் உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாக தமிழக ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கள்ளச்சந்தையில், வணிக சிலிண்டர் விலை ரூ.6 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதல் தீவிரத்தால், மத்திய கிழக்கு நாடுகளில் எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி, விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், திரவ பெட்ரோலியம் எரிவாயு (எல்பிஜி) விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. வீட்டுஉபயோக சிலிண்டருக்கு முன்னுரிமை அளிப்பதற்காக, வர்த்தக சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, சென்னை உட்பட பல நகரங்களில் உணவுகளை தயாரித்து வழங்கும் ஹோட்டல்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஹோட்டல்களில் விற்கப்படும் உணவு வகைகளின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது. இதுதவிர, வணிக சிலிண்டர் இல்லாததால், ஓட்டல்களும் மூடப்பட்டுள்ளன.

215 ஹோட்டல்கள் மூடல்

இந்நிலையில், தமிழகத்தில் 15சதவீதம்உணவகங்கள்மூடப்பட்டுள்ளதாக தமிழக ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, அச்சங்கம் தரப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக, சென்னையில் 215 சிறிய மற்றும் நடுத்தர ஹோட்டல்கள் மூடப்பட்டுள்ளன. பெரிய அளவிலான ஹோட்டல்கள் விறகு மற்றும் மின்சார அடுப்புகளுக்கு மாறியுள்ளன. சென்னை தவிர்த்து பிற நகரங்களில் பெரும்பாலானோர் மாற்று எரிபொருளுக்கு மாறியுள்ளனர். மேலும் காஸ் சிலிண்டர் வருகையைப் பொருத்து அவ்வப்போது ஹோட்டல்களைதிறப்பதும்,உணவுவகைகளை கணிசமாக குறைத்தும் விற்பனையை மேற்கொள்கின்றனர் தமிழகத்தில் இதுவரை தோராயமாக 300-க்கும் மேற்பட்ட உணவுக் கடைகள் அதாவது மொத்தம் உள்ள கடைகளில் 15 சதவீதம் என்ற அளவில் மூடப்பட்டுள்ளது. இவ்வாறு அச்சங்கத்தின் தெரிவித்துள்ளனர்.

கள்ளச்சந்தையில் ரூ.6 ஆயிரம்

வர்த்தக சிலிண்டர்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், கள்ளச்சந்தையில் வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர்கள் மிக அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. சென்னையில் 19 கிலோ எடைகொண்ட வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை ரூ.2,043.50 ஆகும். இது தற்போது ரூ.6 ஆயிரம் முதல் ரூ.6,500 வரை கள்ளச்சந்தையில் கிடைக்கிறது.

தேநீர் கடை உரிமையாளர் ஒருவர் கூறுகையில்“வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் கிடைக்கவில்லை, கள்ளச்சந்தையில் இந்த சிலிண்டர் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. எனவே மின் அடுப்புக்கு மாறிவிட்டோம். மேலும் வடை, பஜ்ஜி, சமோசா, போண்டா போன்றவற்றை தயாரிப்பதை நிறுத்திவிட்டோம்” என்று தெரிவித்தார்.

தென்னிந்திய நடிகர் சங்க நிர்வாகிகளின் பதவிக்காலம் மேலும் 3 ஆண்டு நீட்டிப்பு

■ சென்னை

தென்னிந்திய நடிகர் சங்க விதிகளின்படி 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கத்துக்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதன்படி, கடந்த 2022-ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பதவிக் காலம் கடந்த 2025 மார்ச் மாதத்துடன் முடிவடைந்த நிலையில் இவர்களின் பதவிக்காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து சங்க பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த தீர்மானத்தை எதிர்த்தும், உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதியை ஆணையராக நியமித்து சங்கத் தேர்தலை நடத்த உத்தரவிடக் கோரியும், சங்க உறுப்பினரான நம்பிராஜன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி ஏ.டி.மரியா கிளேட் முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது சங்க நிர்வாகிகளின் பதவிக்காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை சங்கங்களின் பதிவாளர் ஏற்று உத்தரவு பிறப்பித்துள்ளதாக நடிகர் சங்கம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து இது தொடர்பாக எழுத்துப்பூர்வ வாதங்களை தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதி, வழக்கு விசாரணையை மார்ச் 24-ம் தேதிக்கு தள்ளிவைத்துள்ளார்.

சுகாதாரம், கால்நடை துறைகளில் 542 மருத்துவர்கள்

நியமன ஆணைகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்

■ சென்னை

சுகாதாரம், கால்நடைத் துறைகளில்தேர்வுசெய்யப்பட்ட542மருத்துவர்களுக்குபணிநியமனஆணைகளை, முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

இதுகுறித்து,தமிழகஅரசுவெளியிட்ட செய்திக்குறிப்பு: மருத்துவப் பணியாளர் தேர்வுவாரியத்தின் மூலமாக மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவ துறையில் 182 சிறப்பு மருத்துவர்களும், கதிரியக்கவியல் துறையில் 37 சிறப்பு மருத்துவர்களும், தடயவியல் மருத்துவத் துறையில் 24 சிறப்பு மருத்துவர்களும், முதியோர் மருத்துவத் துறையில் 6 சிறப்பு மருத்துவர்களும், இருதய அறுவை சிகிச்சை துறையில் ஒரு சிறப்பு மருத்துவர் என, மொத்தம் 250 சிறப்பு மருத்துவர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு நேற்று முதல்வர் ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

அதேபோல், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக கால்நடை பராமரிப்புத் துறையில், கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 292 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கும் அடையாளமாக 7 பேருக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக குற்ற வழக்குத் தொடர்வுத் துறையில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை-2 பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 45 பேருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கும் அடையாளமாக 5 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

நிகழ்ச்சிகளில், அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, அனிதா ராதாகிருஷ்ணன், மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலர் நா.முருகானந்தம் மற்றும்துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

மேலும் செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலையில் ரூ.35.45 கோடி மதிப்பில் 59,600 சதுர அடி பரப்பில் தரை மற்றும் 3 மேல் தளங்களுடன்கட்டப்படவுள்ளமுன்னாள் படைவீரர் விடுதி மற்றும் பயிற்சி மையத்துக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து, செய்தித்துறையின் ‘தமிழரசு’ சார்பில் தயாரிக்கப்பட்ட தமிழக அரசின் 5 ஆண்டு கால சாதனைகளை விளக்கும் “மக்கள் பணியில் மகத்தான 5 ஆண்டுகள் (2021-26)” சாதனை மலரையும் முதல்வர் வெளியிட்டார்.

மாணவி கடத்தி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக கூறப்பட்ட வழக்கில் திருப்பம்

மன அழுத்தத்தில் பொய் புகார் அளித்துவிட்டதாக திரும்பப் பெற்றார்

■ சென்னை

மாணவி கடத்தி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக கூறப்பட்ட வழக்கில் திடீர் திருப்பமாக, மன அழுத்தத்தில் பொய் புகார் அளித்துவிட்டதாக மாணவி புகாரை திரும்ப பெற்றுக் கொண்டுள்ளார்.

திருச்சியைச் சேர்ந்த 22 வயதுடைய பி.டெக். மாணவி ஒருவர் கடந்த மாதம் 14-ம் தேதி ப்ராஜெக்ட் செய்ய வேண்டி சென்னை வந்து, அடையாறு பகுதியில் உள்ள பெண்கள் விடுதியில் அறை எடுத்து தங்கினார். சென்னை வந்த சில நாட்களில் அடையாளம் தெரியாத நபர்கள் சிலர் மாணவி செல்போன் எண்ணை ‘ஹெக்’ செய்து அவரது புகைப் படங்களை பதிவிறக்கம் செய்ததாக கூறப்படுகிறது.

பின்னர் அந்த புகைப்படங்களை மார்பிங் செய்து ஆபாசப் படமாக மாணவியின் செல்போனுக்கு அனுப்பிய கும்பல் இந்த புகைப்படங்களை அனைவருக்கும் அனுப்பி வைத்துவிடுவோம் எனக்கூறி மிரட்டினராம். இந்நிலையில் கடந்த 9-ம் தேதி கோட்டூர்புரம் அனைத்துமகளிர் காவல்நிலையம் சென்ற அந்த மாணவி, வாய்மொழியாக புகார் தெரிவித்தார்.

அதில், மார்ச் 9 அன்று காரில் வந்த அடையாளம் தெரியாத 4 பேர் கும்பல் தன்னை வலுக்கட்டாயமாக காரில் கடத்தி முகத்தில் மயக்க பவுடரை பூசி, பின்னர் அடையாறில் இறக்கி விட்டதாகவும், அதன் பின்னர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும், முன்னதாக, தன்னுடைய வாட்ஸ்-அப் எண்ணுக்கு 2 வெவ்வேறு எண்களிலிருந்து மார்ஃபிங் செய்த தன்னுடைய புகைப்படங்களை அனுப்பிய அடையாளம் தெரியாத நபர், அவற்றை, நண்பர்கள் மற்றும்உறவினர்களுக்கு அனுப்பி விடுவதாக மிரட்டியதாகவும் தெரிவித்தார்.

இதனால், அந்த மாணவி மிரட்டப்பட்டதோடு, ஓடும் காரில் பாலியல் வன்கொடுமையும் செய்யப்பட்டாரா? என்ற கோணத்தில் போலீஸார் விசாரணையை தீவிரப்படுத்தினர். குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு துணை ஆணையர் வனிதா தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. மாணவி தெரிவித்த பகுதிகளுக்கு சென்ற போலீஸார் அங்கு தீவிர விசாரணை நடத்தினர். மேலும் அந்த பகுதிகளில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை கைப்பற்றி ஆய்வு செய்தனர்.

இந்நிலையில், இந்த வழக்கில் திடீர் திருப்பமாக புகார் அளித்தமாணவிபோலீஸ் அதிகாரிகளிடம் சென்று, “படிப்பு விவகாரத்தில் கடுமையான மன அழுத்தத்தில் இருந்தேன். இதனால்என்னை4 பேர் கும்பல் கடத்தியதாகவும், முகத்தில் மயக்க பவுடரை பூசியதாகவும் உண்மைக்கு மாறான தகவலுடன் புகார் அளித்துவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்’ என தெரிவித்துள்ளார்.

இது போன்றதொரு சம்பவமே நடைபெறவில்லை என தெரிந்த பிறகே போலீஸார் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். மேலும், மாணவிக்கு மன அழுத்தத்துக்கான உளவியல் ஆலோசனை வழங்கவும் ஏற்பாடு செய்துள்ளனர்.

sevakumar.m@hindutamil.co.in

குரோம்பேட்டை வைணவக் கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான செயற்கை நுண்ணறிவு கருத்தரங்கில் பங்கேற்றவர்கள்.

குரோம்பேட்டை எஸ்.டி.என்.பி. மகளிர் வைணவக் கல்லூரியில்

தேசிய அளவிலான செயற்கை நுண்ணறிவு கருத்தரங்கம்

■ சென்னை

குரோம்பேட்டை ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால்பட் மகளிர் வைணவக் கல்லூரியில் (SDNBVC) ‘நாளைய புரட்சி: ஏஐ-வழி உரு மாற்றம்’ என்ற தலைப்பில் தேசிய அளவிலான தொழில்-கல்வித் துறை கருத்தரங்கம் நடைபெற்றது.

2நாட்கள்நடைபெற்ற இந்த நிகழ்வில் தொழில் துறைத் தலைவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் எனப் பலரும் கலந்துகொண்டு, கல்வி மற்றும் சமூகத்தில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் குறித்து விவாதித்தனர்.

சென்னைஜஐடிஇயக்குநர் காமகோடி விழாவைத் தொடக்கி வைத்து உரையாற்றும்போது, “இந்தியாவின் விழுமியங்களைப் பிரதிபலிக்கும்வகையில்நமக்கான சொந்த ஏஐ மாதிரிகளை உருவாக்குவதன் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும், தேசிய கல்விக் கொள்கை 2020-ன் இலக்குகளை அடையவும், தாய்மொழியில் கற்றலை எளிதாக்கவும் ஏஐ ஒரு சிறந்த துணை விமானி போலச் செயல்படும்” என்று குறிப்பிட்டார்.

உருமாற்றத் தொழில்நுட்பம்

கேபிஎம்ஜி நிறுவனத்தின் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை தேசியத் தலைவர் நாராயணன் ராமசாமி தனது சிறப்புரையில், “ஏஐ என்பது வேலைவாய்ப்பிற்கு அச்சுறுத்தல் அல்ல, அது மனிதத் திறனை மேம்படுத்தி கண்டுபிடிப்புகளை வேகப்படுத்தும் ஒரு உருமாற்றத் தொழில்நுட்பம்” என்று கூறினார்.

இந்தக் கருத்தரங்கில் ஐஐடி, என்ஐடி, விஐடி போன்ற முன்னணி கல்வி நிறுவனங்களின் நிபுணர்களும், பல்வேறு சர்வதேச நிறுவனங்களின் வல்லுநர்களும் பங்கேற்றுத் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டனர். கல்வி கற்பித்தலில் ஏஐ கருவிகளைப் பயன்படுத்துவது குறித்த நேரடிப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. கல்வியில் ஏஐ-ன் பயன்பாடு குறித்த ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

சட்டப்பேரவை தேர்தல் முன்னேற்பாடுகள்

தேர்தல் நடத்தும் அலுவலர்களுடன் சென்னை டிஇஓ ஆலோசனை

■ சென்னை

சட்டப்பேரவைத் தேர்தல் முன்னேற்பாடுகள் தொடர்பாக சென்னைமாவட்ட தேர்தல்நடத்தும் அலுவலர்களுடன்மாவட்ட தேர்தல் அலுவலர் (டிஇஓ) ஜெ.குமரகுருபரன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

சென்னையில் உள்ள 16 தொகுதிகளில் எதிர்வரும் 2026 சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் தேர்தல் நடத்தை விதிகளை அமல் படுத்தி கண்காணிக்க தேர்தல் இணைப்புப் பொறுப்பாளர்கள் (Nodal Officers) நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழு, வீடியோ கண்காணிப்புக் குழு மற்றும் வீடியோ பார்வையிடும் குழு ஆகியவற்றின் மூலம் சென்னைமாவட்டம்முழுவதும் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுக்களில் நாளொன்றுக்கு தலா 3 குழுக்கள் வீதம் சுழற்சி முறையில் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. 3 நபர்கள் அடங்கிய வீடியோ கண்காணிப்புக் குழு தயார்நிலையில் இருக்கவும், இந்தக் குழுக்கள் ஒவ்வொரு நாளும் களப்பணியில் இருந்து, சட்ட விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அதன்மீதுநடைமுறையில் உள்ள சட்டப்படி நடவடிக்கை எடுத்து, அதை உயர்நிலை அலுவலர்களுக்கு அறிக்கையாக சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேர்தல் செலவின கண்காணிப்புக்காக தேர்தல் கைப்பற்றுகை மேலாண்மை அமைப்பு (Election Seizure Management System) 20-க்கும் மேற்பட்ட வெவ்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் மூலம் செயல்பட உள்ளது குறித்து விளக்கப்பட்டது.

மேலும் சி-விஜில் (C-VIGIL) என்ற பொதுமக்கள் கண்காணிப்பு செயலி மூலம் பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்களுக்கு உடனடியாக தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்எனதேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் க.கற்பகம், மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்)பூஷ்ணா தேவி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

Central Bank of India சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா 1911 से आपके लिए 'केंद्रित' 'CENTRAL' TO YOU SINCE 1911

தாம்பரம் / சேலையூர் கிளை
எண்.1, குருசாமி நகர், வேளச்சேரி மெயின் ரோடு, கௌரிவாக்கம், சென்னை-600 073 Ph No. 044-22281900

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை சொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **நேரடியான கவாதீனத்தில் (Physical Possession)** எடுக்கப்பட்டு அந்த சொத்துக்கள் "**உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் கடன்தாரர்/ அடமானதாரரிடமிருந்து கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக **https://baanknet.com** என்ற இணையதளம் வழியாக **விற்பனை செய்யப்படும்** என இதன் மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.1 **கடன்தாரர்: Mr.ஸ்ரீ விக்னேஷ்,** S/o.முரளி, மனை எண்.33, ரங்கநாயகி தெரு, பாக்கியம் நியூ டவுன், காக்கலூர், திருவள்ளூர்-602003 **சக-விண்ணப்பதாரர்: Mr.முரளி.N,** S/o.நடராஜன், மனை எண்.46, ஆஞ்சநேயபுரம், 1வது தெரு, காக்கலூர், திருவள்ளூர் மாவட்டம்-602003

கோரிக்கை அறிவிப்பு தேதி: 04.05.2024 / கடன் நிலுவைத்தொகை: **11.03.2026** அன்றுள்ளபடி **₹ 86,99,367.85** வட்டி, கட்டணங்கள்; **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 22.07.2024**

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

தென் சென்னை பதிவு மாவட்டம், சைதாப்பேட்டை ஜாயின்ட்-I சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, பழைய சர்வே எண்.15 (பகுதி), பட்டா எண்.1955, பட்டா படி சர்வே எண்.15/1A, தற்போதைய (ஆன்லைன்) பட்டா புதிய சட்டிவிஷன் சர்வே எண்.15/1A1, (31.12.2007 தேதியிட்ட CMDA மற்றும் குன்றத்தூர் பஞ்சாயத்து யூனியன்-ஆல் ஒப்புதல் அளிக்கப்பட்ட சட்டிவிஷன் அனுமதி PP.எண்.1938/2007; D.Dis No.7409/06/A3) **மனை எண்.C பகுதி (எண்கள்.59 & 60 பகுதி), மதுரம் நகர் IIவது தெரு, கொளத்துவாஞ்சேரி, கொளத்துவாஞ்சேரி வருவாய் கிராமம், குன்றத்தூர் வருவாய் தாலுகா, காஞ்சிபுரம் (முன்னர் ஸ்ரீபெரும்புதூர் தாலுகா) வருவாய் மாவட்டம்** என்னும் முகவரியில் **3345 சதுர அடி அல்லது 310.90 சதுர மீட்டர் அல்லது அதற்கு ஏறக்குறைய நிலம், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்:** வடக்கு: சட்டிவிஷன் மனை எண்கள்.'A' &'B' **(12'0' அகல தனியார் வழிப்பாதை உட்பட.),** தற்போதுள்ள 30 அடி ரோட்டிற்கு செல்லும் பாதை, தெற்கு: சர்வே எண்.14 (பகுதி)-ல் உள்ள நிலம், கிழக்கு: சர்வே எண்.15/1B-ல் உள்ள மனை எண்.61, மேற்கு: சர்வே எண்.16-ல் உள்ள நிலம். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 81/7 ½ அடி 12 அடி வழிப்பாதை, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 81/4 ½ அடி 12 அடி வழிப்பாதை, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்: 30 அடி 75 அடி வழிப்பாதை, வடக்கு தெற்காக மேற்கு பக்கம்: 30 அடி 75 அடி வழிப்பாதை மொத்தம் 3345 சதுர அடி.
மேற்குறிப்பிட்டுள்ள ஷெட்யூல் சொத்தில் மொத்தமுள்ள 3345 சதுர அடி அல்லது 310.90 சதுர மீட்டர் நிலத்தில் 374 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம். **ப்ளாட் எண்.S2, இரண்டாவது தளம், "SS ரெசிடென்சி" என்றழைக்கப்படும் கட்டிடம், இதில் 1004 சதுர அடி ப்ளாட்,** பொது இடம் உட்பட, அனுமதி திட்டபடி மற்றும் கட்டுமான திட்டம் ஷெட்யூல் நிலத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் ஸ்டில்ட் தளத்தில் மூடிய கார் பார்க்கிங்.
Property ID: CBIN1993TAMBZIAUL01

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ **39,50,000/-** டேவணித்தொகை ₹ **3,95,000/-** ஏல உயர்வு தொகை ₹ **20,000/-**

வ. எண்.3 **கடன்தாரர்: Mr.சிட்டிலிங்கம் தேவேந்திரன், சக-கடன்தாரர் / ஜாமீன்தாரர்: Mrs.மாலா தேவேந்திரன், இருவரது முகவரி,** எண்.18E, 6வது தெரு, புத்தர் நகர், புதிய பெருங்களத்தூர், சென்னை-600063

கோரிக்கை அறிவிப்பு தேதி: 05.09.2024 / கடன் நிலுவைத்தொகை: **11.03.2026** அன்றுள்ளபடி ₹ **49,45,258.66** மற்றும் வட்டி, கட்டணங்கள்; **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 13.11.2024**

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

செங்கல்பட்டு பதிவு மாவட்டம், திருப்போரூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, பழைய சர்வே எண்.29/7B, தற்போதைய பட்டா எண்.1152 படி புதிய சர்வே எண்.29/7B1, **மனை எண்.177, "ரேணுகா நகர்" என அழைக்கப்படும் குடியிருப்பு லேஅவுட், பேஸ்-II, செங்கல்பட்டு நகர மற்றும் கிராம திட்டமிடல் துணை இயக்குநரால் அனுமதிக்கப்பட்ட 23.11.2017 தேதியிட்ட** DTCP. எண்.185 (R)/2017 மற்றும் தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணைத்தால் 29.01.2022 தேதியிட்ட TN/10/Regularization-Layout/0110/2022, **வெண்பேடு கிராமம், முன்னர் செங்கல்பட்டு தாலுகா, தற்போது திருப்போரூர் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 20'0", கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 20'0", வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்: 30'0" மேற்கு பக்கம்: 30'0" ஆகமொத்தம் **600 சதுர அடி நிலம், அதிலுள்ள வீட்டுக்கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மனை எண்.172, தெற்கு: 23 அடி அகல ரோடு, கிழக்கு: மனை எண்.176, மேற்கு: மனை எண்.178
Property ID: CBIN1993TAMBCITYDEV01

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ **27,50,000/-** டேவணித்தொகை ₹ **2,75,000/-** ஏல உயர்வு தொகை ₹ **20,000/-**

வ. எண்.4 **கடன்தாரர்: Mr.K.ஸ்ரீதர்,** S/o.கிருஷ்ணன், மனை எண்.48, சாய் லட்சுமி ப்ளாட்ஸ், ப்ளாட் எண்.T2, மூன்றாவது தளம், சுவர்ணபுரி நகர், காட்டுப்பாக்கம், சென்னை-600056 **ஜாமீன்தாரர்: Mr.ஜெயந்தா கோலி,** S/o.தபன் கோலி, C/o.தபன் கோலி, கதவு எண்.80/3, மேட்டு தெரு, திருவொற்றியூர், திருவள்ளூர் மாவட்டம், சென்னை-600019

கோரிக்கை அறிவிப்பு தேதி: 31.08.2024/ கடன் நிலுவைத்தொகை: **11.03.2026** அன்றுள்ளபடி ₹ **81,78,799.31** மற்றும் வட்டி, கட்டணங்கள்; **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 26.11.2024**

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

தென் சென்னை பதிவு மாவட்டம், குன்றத்தூர் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, பழைய சர்வே எண்.129, பட்டா எண்.9777, OER பட்டா சர்வே எண்.129/4, பட்டா எண்.10070 படி, சர்வே எண்.129/4B, (CMDA மூலம் ஒப்புதல் பெற்ற லே-அவுட் vide PPD/LO/727/2018, Lr Reg.I/8490/2018 தேதி 29/05/2018 மற்றும் பாகம் பிரிக்கப்பட்ட P.P.எண்.72792/201/2018, D.Dis எண்.1992/2018/A3, தேதி 02.05.2018) **மனை எண்.48, ஸ்வர்ணபுரி நகர், காட்டுப்பாக்கம் கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், சென்னை-600056** என்னும் முகவரியில் **1800 சதுர அடி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மனை எண்.39 & 40, தெற்கு: 24 அடி ரோடு, கிழக்கு: மனை எண்.47, மேற்கு: மனை எண்.49. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 30"0" அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 30"0" அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்: 60"0" அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம்: 60"0" அடி ஆக மொத்தம் 1800 சதுர அடி.
மேற்குறிப்பிட்டுள்ள ஷெட்யூல் A சொத்தில் மொத்தமுள்ள 1800 சதுர அடி அல்லது 300 சதுர மீட்டர் நிலத்தில் 306 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம். **ப்ளாட் எண்.T2, மூன்றாவது தளம், "சாய் லட்சுமி ப்ளாட்ஸ்", இதில் இரண்டு படுக்கையறை கொண்ட ப்ளாட்,** பொது இடம் உட்பட, அனுமதி திட்டபடி ஷெட்யூல் A நிலத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் ஸ்டில்ட் தளத்தில் மூடிய கார் பார்க்கிங்.
Property ID: CBIN1993TAMBSRIDH01

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ **53,50,000/-** டேவணித்தொகை ₹ **5,35,000/-** ஏல உயர்வு தொகை ₹ **20,000/-**

வ. எண்.5 **கடன்தாரர்: Mrs.சசி.B,** W/o.Mr.P.பிரபு, **சக-கடன்தாரர்: Mr.பாபு.P,** S/o.Mr.பெருமாள், இருவரது முகவரி, எண்.4, ராமசாமி படையாச்சி தெரு, சேலையூர், சென்னை-600073

கோரிக்கை அறிவிப்பு தேதி: 07.07.2022 / கடன் நிலுவைத்தொகை: **11.03.2026** அன்றுள்ளபடி ₹ **46,10,717/-** மற்றும் வட்டி, கட்டணங்கள்; **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 06.01.2023**

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

தென் சென்னை பதிவு மாவட்டம், படப்பை சார் பதிவு மாவட்டம் மற்றும் குன்றத்தூர் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.213/2A மற்றும் 213/3, பழைய பட்டா எண்.8940, புதிய பட்டா எண்.11789 பட்டா படி பாகம் பிரிக்கப்பட்ட சர்வே எண்.213/20, D.D.T.P. L.A. எண். 250/1973, கமிஷனர், குன்றத்தூர் பஞ்சாயத்து யூனியன், படப்பை, உறுப்பினர் செயலாளர், C.M.D.A., சென்னை-600008-ஆல் வழங்கப்பட்ட 26.08.2013 தேதியிட்ட திட்ட அனுமதி எண்.911/2013, DD-3063/2013/A3, மற்றும் நிர்வாக அதிகாரி, கமிஷனர், வரதராஜபுரம் முதல் கிரேட் பஞ்சாயத்து, குன்றத்தூர் பஞ்சாயத்து யூனியன்-ஆல் வழங்கப்பட்ட 21.10.2013 தேதியிட்ட எண்.143/2013-2014, எண்.111, வரதராஜபுரம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், **மனை எண்.82, முதல் தளம், ப்ளாட் எண்.1, "மாப்பில்" "விஜய நகர்" என பெயரிடப்பட்ட லேஅவுட், வரதராஜபுரம், சென்னை** என்னும் முகவரியில் **1099 சதுர அடி R.C.C. தளம் போட்ட கட்டிடம்.** மற்றும் மொத்தமுள்ள ஷெட்யூல் A சொத்தில் **2800 சதுர அடி நிலத்தில் 423 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம்,** அதனுடன் அனைத்து